FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319407

1. District : Kanchipuram PS: VTAC/Kanchipuram Year: 2026 FIR No.: 02/AC/2026/KM Date: 19/06/2026 at 15.30 hrs
   மாவட்டம் காவல்நிலையம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 (as amended by Act 2018) and 106 BNSS Sections பிரிவுகள்: U/s. 7, 7(A) & 12 of the PC ACT 1988
   (ii) Act சட்டம்: ACT Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: BNSS 2023. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from : 18/06/2026 Date to : Between 12.00 hrs to 21.45 hrs.
   குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
   Time Period : Time from : Time to :
   நேர அளவு நேரம் முதல் நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 19/06/2026 Time : 15.00 hrs.
   காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 19/06/2026 Time : 15.00 hrs & 15.30 hrs.
   பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : Written.
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Regional Transport office, Kanchipuram North East at about 10 KM.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : — (b) Address : —
   முறைக் காவல் எண் முகவரி

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : R. Mohankumar (b) Father's/ Husband's Name : —
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : (d) Nationality : Indian (e) Passport No. : —
   நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : Place of Issue : —
   வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Spl. Tahsildar (g) Address : Disaster Management, O/o. the District Collector, (I/c) District Deputy Inspector cell officer, Kanchipuram.
   தொழில் முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்) 1) Tr. Logachellan, PA to RTO, 2) Tr. Sivaraj, Motor Vehicle Inspector GrI, 3) Tr. Elumalai, Assistant all are O/o. the RTO Kanchipuram, 4) Tr. Kamalesh, S/o. Ravi, 5) Tr. Balachandran, S/o. Choudram, 6) Tr. Dellibabu S/o. Subramani & 6) Tr. Jayaraj S/o Govindu

8. Reasons for delay in reporting by the complainant / Informant: All are (Govts / Private Individuals)
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

—

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Un Accounted money / un-explained money of Rs. 69,020/-

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

During surprise check conducted at RTO office, Kanchipuram.

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate FIR contents herewith enclosed.

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Inspector of Police VPAC I Kanchipuram to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..... on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

19/6/26

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

19/6/26

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

20.06.2026, 12.00 hrs

Name: பெயர் (V. Devavarayanan)
Rank: நிலை Inspector of Police No. எண்
Vigilance and Anti-corruption
Kanchipuram.

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

Accused Officers:

1) திரு.ஜெ.லோகநாதன், ஆ/வ-52,
த/பெ.ஜெகன்நாதன்,
PA to RTO, O/o. the RTO,
காஞ்சிபுரம்.

2) திரு.து.சிவராஜ், ஆ/வ-52,
த/பெ.துரைராஜ்,
Motor Vehicle Inspector (Gr-I),
O/o. the RTO, காஞ்சிபுரம்.

3) திரு.பா.ஏழுமலை, ஆ/வ-34,
த/பெ.பாபு,
A-3 உதவியாளர், O/o. the RTO,
காஞ்சிபுரம்.

Private Individuals/Touts:

4) திரு.ர.கமலேஷ், ஆ/வ-43,
த/பெ.ரவி,
எண்.49ஏ, மளிகை தெரு,
காஞ்சிபுரம்.

5) திரு.ச.பாலசந்திரன், ஆ/வ-40,
த/பெ.சந்தானம்,
எண்.5/11, இரட்டை பிள்ளையார்
கோயில் தெரு, காஞ்சிபுரம்.

6) திரு.சு.டில்லிபாபு, ஆ/வ-29,
த/பெ.சுப்பிரமணி,
எண்.138, M.G.R. நகர்,
காஞ்சிபுரம்.

7) திரு.கோ.ஜெயராஜ், ஆ/வ-45,
த/பெ.கோவிந்தன்,
எண்.47/18, கவரை தெரு,
வந்தவாசி,
திருவண்ணாமலை மாவட்டம்.

இன்று 19.06.2026-ம்தேதி 15.00 மணிக்கு நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம் அவர்களிடம் திரு.R.மோகன்குமார், தனி வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம் மாவட்டம், கூடுதல் பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் என்பவர் கொடுத்த புகார் மனுவின் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்குமாறு பரிந்துரை செய்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு. அனுப்புநர், திரு.R.மோகன்குமார், தனி வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம். (கூ.பொ) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம். பெறுநர், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, காஞ்சிபுரம். ந.க.எண்:-90/2026/I1, நாள்:-19.06.2026, அய்யா, பொருள்: திடீர் கூட்டாய்வு - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (கூடுதல் பொறுப்பு) காஞ்சிபுரம் மற்றும் காஞ்சிபுரம் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு - காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை - 18.06.2026 திடீர் கூட்டுடாய்வு மேற்கொள்ளப்பட்டது - தொடர்பாக, பார்வை: செயல்முறைகள், ந.க.எண்:-90/2026/I1, நாள்.18.06.2026, காஞ்சிபுரம் மாவட்டம், காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்கள் சம்மந்தமான சோதனை, ஓட்டுநர் உரிமம் பெறுதல், உரிமம் புதுப்பித்தல் சம்மந்தமான வேலைகளுக்கு வரும் பொதுமக்கள் மற்றும் வாகன உரிமையாளர்களிடமிருந்து மேற்படி அலுவலகத்தில் பணிபுரியும் பணியாளர்கள், புரோக்கர்கள் மற்றும் டிரைவிங் ஸ்கூல் அலுவலர்கள் மூலமாக லஞ்சப்பணம் வசூலிப்பதாக

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில், நானும், காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர்கள் மற்றும் விஜிலன்ஸ் குழுவினருடன் காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு நேற்று 18.06.2026-ஆம் தேதி, என்னுடைய தலைமையில் இரு துறை திடீர் கூட்டாய்வு மதியம் சுமார் 12.00 மணிக்கு தொடங்கப்பட்டு, இரவு சுமார் 21.45 மணி வரை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஆய்வின்போது காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணியில் இருந்த திரு.ஜெ.லோகநாதன், PA to RTO, அலுவலக பணியாளர்கள், டிரைவிங் ஸ்கூல் பணியாளர்கள், புரோக்கர்கள் மற்றும் தனி நபர்கள் ஆகியோர்கள் அலுவலகத்தில் இருந்தார்கள். மேலும் சோதனையின்போது, பொன்னேரிக்கரை அருகில் வாகன ஆய்வு மேற்கொண்டிருந்த திரு.து.சிவராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1), திரு.ச.கார்த்திக், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-2), O/o. the Joint Transport Commissioner, Chennai (South) மற்றும் சில இடைத்தரகர்கள் காஞ்சிபுரம் RTO அலுவலகத்திற்கு அழைத்துவரப்பட்டனர். மேலும் சோதனையின்போது அலுவலகத்தில் 1) A4 தபால் பிரிவு இருக்கையின் எதிரில் இருந்த ஜன்னலுக்கு வெளியே அலுவலக பின்புறத்தில் ஜன்னலின்மேல் பணம் ரூ.700/- (ரூ.500x1, ரூ.100x2), 2) அலுவலகத்திற்கு பின்புறம், பதிவறை ஜன்னலுக்கு வெளியே, கீழே இருந்த பணம் ரூ.9,200/- (ரூ.200x46), 3) அலுவலகத்திற்கு பின்புறம் ஜெனரேட்டர் செட்டின் கீழே இருந்த பணம் ரூ.41,000/- (ரூ.500x82) PA to RTO, திரு.லோகநாதன் அவர்கள் முன்னிலையில் என்னால் விஜிலன்ஸ் குழுவினருடன் கண்டெடுக்கப்பட்டு, அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோராததால், இடைத்தரகர்களால் வசூலிக்கப்பட்ட லஞ்சப்பணமாக இருக்ககூடும் என்று கருதி, அலுவலகத்தில் விஜிலன்ஸ் ரெய்டு முன்னிட்டு மேற்படி பணத்தை அலுவலகத்தின் பின்புறமாக ஜன்னல் வழியாகவும், பின்புறமிருந்த ஜெனரேட்டர் செட்டின் அடியிலும் தூக்கி போட்டிருக்கலாம் என கருதி யாரும் உரிமைக்கோராத மேற்படி லஞ்சப்பணத்தை நான் கைப்பற்றினேன். மேலும் அலுவலகத்தில் பணியிலிருந்த உதவியாளர் திரு.ஏழுமலை என்பவரிடமிருந்து கணக்கில் வராத பணம் ரூ.520/-ம் கைப்பற்றினேன். மேலும் அலுவலகத்தில் இருந்த டிரைவிங் ஸ்கூல் பணியாளர்கள், வாகன உரிமையாளர்கள் மற்றும் இடைத்தரகர்கள் 1) திரு.ர.கமலேஷ் என்பவரிடமிருந்து ரூ.2,100/-ம், 2) திரு.ச.பாலசந்திரன், என்பவரிடமிருந்து ரூ.3,000/-ம், 3) திரு.சு.டில்லிபாபு என்பவரிடமிருந்து ரூ.3,500/-ம் மற்றும் 4) திரு.கோ.ஜெயராஜ் என்பவரிடமிருந்து ரூ.9,000/-ம் இருந்தது குறித்து சம்மந்தப்பட்டவர்களிடம்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

விளக்கம் கேட்ட போது, சரியான முகாந்திரம் அளிக்காத காரணத்தினால் மேற்படி பணத்தை வட்டார போக்குவரத்து அலுவலக பணியாளர்களுக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டு வந்த பணம் என கருதி அவற்றை கைப்பற்றினேன். மேலும் இரு துறை கூட்டாய்வின்போது, கீழே கண்ட ஆவணங்கள் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பாக செயல்முறை ஆணை என்னால் ஏற்படுத்தப்பட்டு அனைத்து அலுவலர்களிடமும் கையொப்பம் பெறப்பட்டது. கீழ்க்கண்ட ஆவணங்கள், யாரும் உரிமைக்கோரப்படாத மற்றும் கணக்கில் வராத மொத்த பணம் ரூ.69,020/- மற்றும் இதர ஆவணங்களையும் பார்வையில் கண்ட செயல்முறைகளின்படி இத்துடன் இணைத்து சட்டப்பூர்வமான நடவடிக்கை எடுக்க தங்களிடம் ஒப்படைக்கிறேன். sd, xxxx R.MOHANKUMAR, 19/06/2026), தனி வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம், (கூ.பொ) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், இணைப்பு - 1) திடீர் கூட்டாய்வு செயல்முறைகள் ந.க.எண்:-90/2026/I1, நாள்.18.06.2026 (அசல்), 2) உரிமை கோரப்படாத மற்றும் கணக்கில் வராத பணம் ரூ.69,020/-, 3) அலுவலக பணியாளர்கள் 1) திரு.ஜெ.லோகநாதன், PA to RTO, 2) திரு.து.சிவராஜ், MVI (Gr-I), 3) திரு.ச.கார்த்திக், MVI (Gr-2), 4) திரு.ஏழுமலை, உதவியாளர், 5) திருமதி.தென்றல், DEO, Bonton Staff, ஆகியோர்களின் தன்னிலை விளக்கம், 4) தனிநபர்கள் 1) திரு.பஞ்சாட்சரம், 2) திரு.முரளி, 3) திரு.ராஜேஸ்பரன், 4) திரு.அஸ்ஸலாம் மற்றும் 5) திரு.இரவி ஆகியோர்களின் தன்னிலை விளக்கம், 5) அலுவலக பணியாளர்கள் 12 நபர்கள், தனிநபர்கள் மற்றும் புரோக்கர்கள் 4 நபர்கள், மொத்தம் 16 நபர்களின் வாக்குமூலங்கள், 6) கூட்டாய்வின் போது உண்மை ஆவணங்களாக சான்றொப்பமிட்டு கைப்பற்றப்பட்ட நகல்கள் (8-ஆவணங்கள்), Received a complaint on 19/6/26 @ 15.00 hrs. and Inspector Tr.V.Devanarayanan for n/a and register a case, sd, xxxx (K.V.KALAISELVAM, 19/06/2026, DSP, V&AC, KPM), காஞ்சிபுரம் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் (பொறுப்பு)இ காஞ்சிபுரம் அவர்களின் இரு துறை கிடீர் கூட்டாய்வு குறித்த செயல்முறைகள் ந.க.எண்.90/2026/I1, நாள். 18.06.2026, முன்னிலை:- திரு.R.மோகன்குமார், தனி வட்டாட்சியர், பேரிடர் மேலாண்மை, மாவட்ட ஆட்சியர் அலுவலகம், காஞ்சிபுரம், (கூ.பொ) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், காஞ்சிபுரம் மாவட்டம், பொருள் திடீர் கூட்டாய்வு - காஞ்சிபுரம் மாவட்ட ஆய்வுக்குழு மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காஞ்சிபுரம் ஆகியோர் இணைந்து - காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

அலுவலகத்தினை திடீர் கூட்டாய்வு மேற்கொண்டது - தொடர்பாக. காஞ்சிபுரம் மாவட்டம். தனி வட்டாட்சியர். பேரிடர் மேலாண்மை. மாவட்ட ஆட்சியர் அலுவலகம். காஞ்சிபுரம். (கூடுதல் பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். காஞ்சிபுரம் எனது தலைமையிலும். காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் மற்றும் குழுவினர் சகிதம் காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் வாகனங்களை பதிவு செய்வதற்கும். ஒட்டுநர் உரிமம் வழங்க. புதுப்பிக்க. வாகனங்களுக்கு பேன்சி எண்கள் வழங்க. வாகன தர பரிசோதனை சான்று வழங்க. ஆர்.சி புத்தகங்கள் வழங்க மக்களிடம் கையூட்டாக அதிகப்படியான பணம் வசூலிப்பதாக மேலும் காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள 1) SSV Xerox கடை. 2) காமாட்சி புகை பரிசோதனை நிலையம் & காமாட்சி ஓட்டுநர் பயிற்ச்சி பள்ளி ஆகிய இடங்களில் போக்குவரத்து அலுவலகத்தில் இருந்து இடைத்தரகர்கள் மூலமாக மேற்படி பணிக்கு வரும் பொது மக்களிடமிருந்து லஞ்சப்பணம் வசூல் செய்து மேற்படி கடைகளில் மறைத்து வைத்திருப்பதாகவும் கிடைத்த நம்பகமான ரகசிய தகவலின் அடிப்படையில். இன்று 18.06.2026-ந்தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு மேற்குறிப்பிட்ட காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திலும் மற்றும் மேற்படி Xerox கடை மற்றும் காமாட்சி வாகன புகை பரிசோதனை நிலையம் & ஓட்டுநர் பயிற்சி பள்ளியிலும் மேற்கொள்ளப்பட்ட திடீர் கூட்டுத் தணிக்கையின் நடவடிக்கைகள் குறித்த விவரம் வருமாறு. இன்று 18.06.2026-ம் தேதி. காஞ்சிபுரம் மாவட்டம். தனி வட்டாட்சியர். பேரிடர் மேலாண்மை. மாவட்ட ஆட்சியர் அலுவலகம். காஞ்சிபுரம். (கூடுதல் பொறுப்பு) மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். காஞ்சிபுரம் திரு.R.மோகன்குமார். காஞ்சிபுரம் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.K.V.கலைசெல்வம். காவல் ஆய்வாளர்கள் திரு.V.தேவநாராயணன். திருமதி.கீதா. உதவி ஆய்வாளர் திரு.A.சிதம்பரம். சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திருமதி.ஜமுனா மற்றும் விஜிலன்ஸ் குழுவினர்கள் இணைந்து காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி ஆய்வு தொடர்பாக இன்று 18.06.2026-ந் தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு உள்ளே சென்றபோது. மேற்படி அலுவலகத்தில் திரு.லோகநாதன். நேர்முக உதவியாளர் (PA to RTO) காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகம் என்பவர் அலுவலக பணியில் இருந்தார். அவரிடம் மாவட்ட துணை ஆய்வுக்குழு

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

அலுவலர் ஆகிய நான். என்னை அறிமுகம் செய்துகொண்டு என்னுடன் வந்திருந்த ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர்கள் மற்றும் விஜிலன்ஸ் குழுவினரையும் அறிமுகம் செய்துவைத்து. சுயபரிசோதனை செய்யப்பட்டது. பின்னர் நான் வட்டார போக்குவரத்து அலுவலர் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் குறித்து விசாரித்தபோது. வட்டார போக்குவரத்து அலுவலர் (RTO) திரு.நாகராஜன். மோட்டார் வாகன ஆய்வாளர் (MVI) நிலை-1. திரு.சிவராஜ் மற்றும் மோட்டார் வாகன ஆய்வாளர் (MVI) நிலை-2. திரு.கார்த்திக் ஆகியோர்கள் பொன்னேரி கரைக்கு அருகில் வாகன ஆய்விற்கு சென்றுள்ளதாக தெரிவித்தார். அதனை தொடர்ந்து காவல் ஆய்வாளர் திரு.V.தேவநாராயணன். உதவி ஆய்வாளர் திரு.சிதம்பரம் மற்றும் காவலர்களை மேற்படி இடத்திற்கு அனுப்பி வட்டார போக்குவரத்து அலுவலகத்தினை திடீர் ஆய்வு செய்ய வந்திருப்பதாக தகவலை தெரிவித்து RTO மற்றும் MVI ஆகியோர்களை இவ்வலுவலகத்திற்கு அழைத்துவரும்படி அனுப்பிவைக்கப்பட்டது. அப்போது காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களின் அறிவுறுத்தலின்படி PA to RTO, திரு.லோகநாதன் தன்னுடைய செல்போனிலிருந்து (9787689818). RTO திரு.நாகராஜன் செல்போனிற்கு (9751470353) தொடர்பு கொண்டு RTO அலுவலகத்திற்கு விஜிலன்ஸ் ரெய்டு வந்துள்ளார்கள். அலுவலகம் வரும்படி அழைத்தார். ஆனால் அவர் State Transport Authoriy (STA) மீட்டிங்காக சென்னை கிண்டிக்கு செல்வதாக தெரிவித்து. செல்போனை துண்டித்துவிட்டார். பின்னர் மவாட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகிய நான். காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் திருமதி.கீதா. விஜிலன்ஸ் குழுவினர் மற்றும் PA to RTO, திரு.லோகநாதன் ஆகியோருடன் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த பணியாளர்கள். இடைத்தரகர்கள் மற்றும் வாகன பதிவு & ஓட்டுநர் உரிமம் பெற வந்திருந்த பொதுமக்கள் அனைவரிடமும் அலுவலகத்திற்கு விஜிலன்ஸ் சோதனைக்கு வந்திருப்பதாக தகவல் தெரிவித்து. சோதனை தொடங்கியபோது. அப்போது அலுவலகத்திற்கு உள்ளே அமர்ந்து பணியிலிருந்த இளநிலை உதவியாளர். திரு.சரவணகுமார். A-4. தபால் பிரிவு என்பவர் அமர்ந்திருந்த இருக்கையின் எதிரில் இருந்த ஜன்னலுக்கு வெளியே கசங்கிய நிலையில் பணம் இருந்ததை கவனித்த நானும். காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் திருமதி.கீதா. PA to RTO, திரு.லோகநாதன் மற்றும் விஜிலன்ஸ் குழுவினரை

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

அழைத்துக்கொண்டு. அலுவலகத்திற்கு வெளியே பின்புறம் ஜன்னல் அருகே சென்று பார்த்தபோது. ஜன்னலின் மீது ஐநூறு ரூபாய் நோட்டு-1. நூறு ரூபாய் நோட்டுகள்-2 மொத்தம் ரூ.700/- இருந்தது. அந்த பணத்தை பற்றி கேட்க யாரும் உரிமை கோராததால். மேற்படி அலுவலகத்திற்கு வெளியில் இருந்த இடைத்தரகர்கள் யாரோ பணத்தை போட்டுவிட்டு சென்றிருக்கலாம் என்று கருதி அப்பணம் ரூ.700/-ஐ விசாரணைக்காக கைப்பற்றினேன். மேலும் அலுவலக வளாகத்தின் பின்புறம் சோதனை செய்தபோது. அலுவலக பதிவறையின் ஜன்னலுக்கு வெளியே கீழே ரூ.9,200/- (ரூ.200x46) இருந்தது மேலும் அதன் அருகில் ஜெனரேட்டர் செட்டின் கீழே ரூ.41,000/- (ரூ.500x82) இருந்தது. அந்த பணத்தை பற்றி அலுவலகத்தில் அங்கிருந்த பணியாளர்கள். இடைத்தரகர்கள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டபோது. மேற்படி பணத்திற்கு யாரும் உரிமை கோராததால். இடைத்தரகர்களால் வசூலிக்கப்பட்ட லஞ்சப்பணமாக இருக்கக்கூடும். அலுவலகத்தில் விஜிலன்ஸ் ரெய்டு முன்னிட்டு. மேற்படி பணத்தை ஜன்னல் வழியாகவும். ஜெனரேட்டர் செட்டின் அடியில் தூக்கி போட்டிருக்கலாம் எனகருதி. யாரும் உரிமை கோராத பணம் ரூ.9,200/- & ரூ.41,000/- முறையே விசாரணைக்காக கைப்பற்றினேன். அப்போது. காவல் ஆய்வாளர் திரு.தேவநாராயணன். உதவி ஆய்வாளர் திரு.சிதம்பரம் அவர்களுடன் பொன்னேரிக்கரை அருகில் வாகன ஆய்வு மேற்கொண்டிருந்த மோட்டார் வாகன ஆய்வாளர் (MVI) நிலை-1. திரு.சிவராஜ். மோட்டார் வாகன ஆய்வாளர் (MVI) நிலை-2. திரு.கார்த்திக் மற்றும் அங்கிருந்த சில இடைத்தரகர்களை அழைத்துக்கொண்டு சுமார் 12.20 மணியளவில் அலுவலகத்திற்கு வந்தனர். மேற்படி மோட்டார் வாகன ஆய்வாளர்களிடம் நான். காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் மற்றும் விஜிலன்ஸ் குழுவினரை அறிமுகம் செய்துகொண்டு இருதுறை கூட்டு தணிக்கைக்கு அலுவலகத்திற்கு வந்திருப்பதாகவும். மேற்படி அலுவலக வளாகத்தினுல் உரிமை கோரப்படாத பணம் முறையே 1) ரூ.700/- 2) ரூ.9,200/- & 3) ரூ.41,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்ட பணத்தை பற்றி தகவல் தெரிவித்தபோது. மோட்டார் வாகன ஆய்வாளர்கள் இருவரும் மேற்படி பணம் பற்றி தங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தனர். மேலும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1. திரு.சிவராஜ் அவர்கள் பயன்படுத்தும் Maruti Swift Dzire (TN-73-AZ-4995) வாகன்த்தையும். மோட்டார் வாகன ஆய்வாளர் (MVI) நிலை-2. திரு.கார்த்திக் அவர்கள்

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

பயன்படுத்தும் Kia (TN-01-BR-9973) என்ற இரு வாகனத்தையும் நானும் காவல் துணை கண்காணிப்பாளர். காவல் ஆய்வாளர் திரு.தேவநாராயணன் மற்றும் மோட்டார வாக ஆய்வாளர்கள் ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்யப்பட்டது. அதில் எதுவும் கைப்பற்றவில்லை. பின்னர் அலுவலத்தில் இருந்த அலுவலக பணியாளர்கள். இடைத்தரகர்கள் மற்றும் பொது மக்களை சோதனை செய்தபோது. அவர்களிடமிருந்த பணத்திற்கான விளக்கமும் மற்றும் அலுவலத்திற்கு வந்த் காரணத்தையும் சோதனையின்போது தெரிவித்தார்கள். மேற்படி நபர்களின் விவரம் பின்வருமாறு. மேற்படி அலுவலகத்தில் பணியில் இருந்த அலுவலக பணியாளர்களின் விவரம் கீழ்கண்டவாறு.

வ. எண்	அலுவலகத்தில் ஆஜரில் இருந்த அலுவலர்கள் விவரம்	வைத்திருந்த இருப்புத் தொகை	கையிருப்பு பதிவேட்டின் விவரம்	குறிப்பு
1	திரு.ஜெ.லோகநாதன், PA to RTO;. RTO Office, Kanchipuram.	ரூ.120/-	No Entry	அலுவலகத்திற்கு தாமதமாக வந்தமையால். தான் கையில் வைத்திருந்த பணம் ரூ.120/- பதிவேட்டில் பதிவு செய்யவில்லை என்றும். சொந்த செலவிற்காக கொண்டுவந்த பணம் என்று தெரிவித்தமையால். அப்பணத்தை அவரிடமே திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
2	திரு.து.சிவராஜ். மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-I). O/o. the RTO, Kanchipuram.	ரூ.400/-	ரூ.400/-	ரூ.400/- சொந்த செலவிற்காகவும் மற்றும் உணவுச்செலவிற்காக கொண்டு வந்த பணம் என்று தெரிவித்தமையால். அப்பணம் திரும்ப அவரிடம் ஒப்படைக்கப்பட்டது.
3	திரு.ச.கார்த்திக், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-II). O/o. the Joint Transport Commissioner, Chennai (South).	ரூ.20/-	No Entry	காஞ்சிபுரத்தில் இயங்கிவரும் தனியார் பள்ளி வாகனத்தை கூட்டு ஆய்வு செய்வதற்காக காஞ்சிபுரம் RTO அலுவலகத்திற்கு வந்து. பொன்னேரி கரை. இந்திரா நகரில் வாகனங்களை ஆய்வு செய்துகொண்டிருந்ததாகவும் தெரிவித்தார். அப்பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
4	திரு.கல்யாணசுந்தரம். கண்காணிப்பாளர். RTO Office, Kanchipuram.	ரூ.70/-	ரூ.270/-	தான் வேலூரிலிருந்து வருவதாகவும். போக்குவரத்து மற்றும் தனது சொந்த செலவிற்காகவும் கொண்டுவந்ததாகவும். மதிய சாப்பாடு செலவு ரூ.200/- போக மீதிப்பணம் ரூ.70/- வைத்துள்ளதாகவும் தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

5	திருமதி.தமிழ்செல்வி. கண்காணிப்பாளர். RTO Office, Kanchipuram.	ரூ.350/-	ரூ.350/-	தான் ஆற்காட்டில் இருந்து வருவதாகவும் போக்குவரத்து செலவிற்காகவும் தனது சொந்த செலவிற்காகவும் பணம் ரூ.350/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
6	திரு.பெ.ஏழுமலை. உதவியாளர். RTO Office, Kanchipuram.	ரூ.670/-	ரூ.150/-	தான் காலை அலுவலகத்திற்கு வரும்போது ரூ.670/- கொண்டுவந்ததாகவும் ஆனால் பதிவேடுகளில் பணம் ரூ.150/- மட்டுமே பதிவு செய்ததாகவும் மீதப்பணம் ரூ.520/- வாகன பழுதுபார்க்க கொண்டுவந்ததால். பதிவு செய்யவில்லை என்று தெரிவித்தால். ஆனால் அவர் கூறிய விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லாதமையால். அதிகப்படியான பணம் ரூ.520/- கணக்கில் வராத பணம் என்று கருதி விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
7	திரு.சே.பிரித்விராஜன். உதவியாளர். RTO Office, Kanchipuram.	ரூ.730/-	ரூ.730/-	தான் சொந்த செலவிற்காக பணம் ரூ.730/- கொண்டு வந்ததாக தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
8	திரு.ஆ.ஸ்டீபன். இளநிலை உதவியாளர். RTO Office, Kanchipuram.	ரூ.100/-	ரூ.100/-	தான் திருவள்ளூர். பேரம்பாக்கத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் வருவதால். பெட்ரோல் செலவிற்காக பணம் ரூ.100/- கொண்டு வந்ததாக தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
9	திரு.கு.சரவணகுமார். A-4 இளநிலை உதவியாளர். RTO Office, Kanchipuram.	ரூ.300/-	ரூ.300/-	தான். காஞ்சிபுரத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் வருவதால். பெட்ரோல் செலவிற்காக பணம் ரூ.300/- கொண்டுவந்ததாக தெரிவித்ததால். அப்பணத்தை அவரிடமே திரும்ப ஒப்படைக்கபட்டது. மேலும் தான் அமர்ந்திருந்த ஜன்னலுக்கு வெளியே இருந்து கைப்பற்றிய பணம் ரூ.700/- பற்றி தனக்கு எதுவும் தெரியாது.
10	திரு.கி.பத்ரி நாராயாணன். அலுவலக உதவியாளர். RTO Office, Kanchipuram.	ரூ150/-	ரூ150/-	தான் சொந்த செலவிற்காக பணம் ரூ.150/- கொண்டு வந்ததாக தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
11	திரு.நா.சக்திவேல். தட்டச்சர். RTO Office, Kanchipuram.	ரூ70/-	ரூ100/-	தான் வாலாஜாபாத்திலிருந்து இருசக்கர வாகனத்தில் வருவதாகவும் பெட்ரோல் செலவிற்காக பணம் ரூ.100/- கொண்டுவந்ததாகவும் ரூ.30/-க்கு பேனா வாங்கிவிட்டு. மீதப்பணம் ரூ.70/- வைத்துள்ளதாகவும் தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
12	திருமதி.மகாலட்சுமி கணக்கர். RTO Office, Kanchipuram.	ரூ100/-	ரூ100/-	தான் காஞ்சிபுரத்திலிருந்து இருசக்கர வாகத்தில் வருவதாகவும் பெட்ரோல் செலவிற்காக பணம் ரூ.100/- கொண்டு வந்ததாக தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

13	திரு.முத்துகாளத்தி. DEO (Bonton Staff), RTO Office, Kanchipuram.	ரூ160/-	ரூ340/-	தான் சொந்த செலவிற்காகவும், சாப்பாடு செலவிற்காகவும் பணம் ரூ.340/- கொண்டு வந்ததாகவும், அதில் 180/- செலவு செய்தது போக மீதிப்பணம் ரூ.160/- கையில் வைத்திருப்பதாகவும் தெரிவித்ததை தொடர்ந்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
14	திருமதி.தென்றல், DEO (Bonton Staff), RTO Office, Kanchipuram.	ரூ300/-	ரூ300/-	தான் சொந்த செலவிற்காக கொண்டுவந்த பணம் என்று தெரிவித்தமையால் அப்பணம் ரூ.300/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
15	திரு.சகாதேவன், DEO (Bonton Staff), RTO Office, Kanchipuram.	ரூ70/-	No Entry	தான் வந்தவாசியிலிருந்து வருவதால், போக்குவரத்து செலவிற்காக ரூ.70/- கொண்டுவந்ததாகவும், தான் புதிதாக பணியில் சேர்ந்ததால், தனக்கு பதிவேட்டில் பதிவு செய்யவேண்டுமென்று தெரியாது என்றும் தெரிவித்தமையால் அப்பணம் ரூ.70/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் மேற்படி காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இருந்த டிரைவிங் ஸ்கூல் பணியாளர்கள், இடைத்தரகர்கள் மற்றும் சில பொது மக்களின் விவரம் பின்வருமாறு.

வ. எண்	அலுவலகத்தில் ஆஜரில் இருந்த தனி நபர்கள் விவரம்	வைத்திருந்த இருப்புத் தொகை	குறிப்பு
1	திரு.ர.கமலேஷ், த/பெ.ரவி, எண்.49ஏ, மனிகை தெரு, காஞ்சிபுரம்.	ரூ.2,100/-	தான் காஞ்சிபுரம் ஒலிமுகமதுபேட்டையில் அன்பு புகை பரிசோதனை நிலையம் வைத்து நடத்தி வருவதாகவும், அதற்கு உரிமத்தை புதிப்பிப்பது தொடர்பாக RTO அலுவலகம் வந்து, மோட்டார் வாகன ஆய்வாளர் திரு.சிவராஜ் அவர்களை சந்தித்த பின்னர் அலுவலகத்தில் இருந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம் ரூ.2,100/- தன்னுடைய உறவினரின் விசேஷத்திற்கு துணி எடுப்பதற்காக கொண்டுவந்ததாகவும் தெரிவித்தார். ஆனால் அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால், மேற்படி பணம் வாகன புகை பரிசோதனை நிலைய உரிமம் புதுப்பிப்பது தொடர்பாக லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என்று கருதி அப்பணம் ரூ.2,100/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் அவரை விசாரித்தபோது, அவரது புகை பரிசோதனை நிலைய உரிமம் புதுப்பித்தல் தொடர்பான ஆய்வறிக்கை படிவம்-2ஐ அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி.மகாலட்சுமதி என்பவரிடமிருந்து பெற்று நகலெடுத்து வழங்கியதை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7,.7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

2	திரு.ச.பாலசந்தரன், த/பெ.சந்தானம், எண்.5/11, இரட்டை பிள்ளையார் கோயில் தெரு, காஞ்சிபுரம்.	ரூ.3,000/-	தான் காஞ்சிபுரம் நெல்லுகார தெருவில் கார்த்திக் ஓட்டுநர் பயிற்சி பள்ளி நடத்தி வருகிறேன், அவ்வோட்டுநர் பயிற்சி பள்ளி சார்பாக 8 வருடம் முடிவடைந்த இருசக்கர வாகனத்திற்கு செயல்முறை ஆணை நகல் பெற RTO அலுவலகம் வந்ததாகவும், தன்னிடம் இருந்த பணம் ரூ.3,000/- கோயிலுக்கு 10 நாட்கள் மோர் கொடுப்பதற்காக பணம் செலுத்தவேண்டி வைத்திருப்பதாகவும் தெரிவித்தார், ஆனால் அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால், மேற்படி பணம் ஓட்டுநர் பயிற்சி பள்ளி மாணவர்களுக்கு புதிதாக ஒட்டுநர் உரிமம் பெறுவது தொடர்வாக லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என்று கருதி அப்பணம் ரூ.3,000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
3	திரு.கூ.டில்லிபாபு, த/பெ.சுப்பரமணி, பிளாட் எண்.138, எம்.ஜி.ஆர். நகர், சிறுகாவேரிபாக்கம், காஞ்சிபுரம்.	ரூ.3,500/-	தான் தாமரைதாங்கள் கிராமத்தில் உள்ள Brimming CBSC பள்ளியில் வாகன பொறுப்பாளராக பணிபுரிவதாகவும், தங்கள் பள்ளியின் 4 வாகனங்களுக்கு FC சான்றிதழ் பெறுவது சம்மந்தாக RTO அலுவலகம் வந்ததாகவும், பின்னர் அலுவலகத்திற்கு அருகில் இருந்த சோதனை மையத்தில் இருந்ததாகவும், தன்னிடமிருந்த ரூ.3,500/- வாகனங்களுக்கு ஸ்டிக்கர் ஒட்டுவதற்காக வைத்திருந்ததாகவும் தெரிவித்தார், ஆனால் அவருடைய விளக்கம் ஏற்றுக்கொள்ள கூடியதாக இல்லாததால், மேற்படி பணம் பள்ளி வாகனங்களுக்கு FC சான்றிதழ் பெறுவது சம்பந்தமாக லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என்று கருதி அப்பணம் ரூ.3,500/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.
4.	திரு.ஜெயராஜ், த/பெ.கோவிந்தன், எண்.47/18,காவரை தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை மாவட்டம்.	ரூ.9,000/-	தான் வந்தவாசியில் உள்ள நாராயணமூர்த்தி பேரூந்து நிறுவனத்தின் உரிமையாளர் என்றும், தங்கள் நிறுவனத்தின் பேரூந்து TN-20-BA-1301 க்கு Permit Renewal செய்யவேண்டி ஆன்லைனில் மனு செய்திருந்ததாகவும், மேற்படி வாகனத்தின் ஒரிஜினல் பதிவு புதுப்பிப்பு சான்று வாங்குவது சம்மந்தமாக RTO அலுவலகம் வந்ததாகவும், தான் வைத்திருந்த பணம் ரூ.9,000/- வாகனத்தின் பயணிகளிடமிருந்து பெற்ற கலெக்ஷன் பணம் என்றும் தெரிவித்தார், ஆனால் அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளகூடியதாக இல்லாததாலும், பேரூந்தின் Permit Renewal செய்யவேண்டி ஆன்லைனில் மட்டுமே கட்டணம் செலுத்தவேண்டும் என்பதாலும், மேற்படி பணம் பேரூந்தின் Permit Renewal செய்யவேண்டி RTO அலுவலக ஊழியருக்கு லஞ்சமாக கொடுக்க கொண்டுவந்திருக்கலாம் என்று கருதி மேற்படி பணம் ரூ.9,000/- விசாரணைக்கு கைப்பற்றப்பட்டது.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

5	திரு.முரளி. த/பெ.காளிதாஸ். எண்.36, செலிவ விநாயகர் கோயில் தெரு, காஞ்சிபுரம்.	ரூ.300/-	தன்னுடைய ஓட்டுநர் உரிமம் கணினியில் பதிவேற்றம் செய்ய RTO அலுவலகம் வந்ததாகவும், தான் சொந்த செலவிற்காக பணம் ரூ.300/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்ததையடுத்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
6.	திரு. அஸ்லாம். த/பெ.இஸ்மாயில். எண்.1/19,திருக்காலிமேடு, காஞ்சிபுரம்.	ரூ.1,010/-	தான் புதிதாக இருசக்கர வாகனம் வாங்கியிருப்பதாகவும், அதற்கு பேன்ஸி நம்பர் வாங்குவதற்கான வழிமுறை கேட்டுச்செல்ல RTO அலுவலகம் வந்ததாகவும், தான் சொந்த செலவிற்காக பணம் ரூ.1,010/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்ததையடுத்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.
7.	திரு.ராஜேஸ்வரன், த/பெ.பசுபதி, 117, நீலகண்டாபுரம், கருப்படிதட்டை கிராமம், காஞ்சிபுரம்.	ரூ.830/-	தான் சிவா மோட்டார்ஸில் கடந்த 6 வருடமாக பணிபுரிவதாகவும், புதிய 6 இருசக்கர வாகனம் பதிவிற்காக பதிவேடுகளை கொண்டுவந்து அலுவலகத்தில் கொடுத்துவிட்டதாகவும், அப்போது ரெய்டில் சோதனை செய்தபோது, சொந்த செலவிற்காக கொண்டுவந்திருந்த பணம் ரூ.830/- இருந்தது. அப்பணத்தை திரும்ப அவரிமே ஒப்படைக்கப்பட்டது.
8.	திரு.பஞ்சாட்சரம். த/பெ.அண்ணாதுரை. எண்.9, கூரம் சாலை, வதியூர், காஞ்சிபுரம்.	ரூ.410/-	தான் பாலுசெட்டிலுள்ள பாலாஜி ஓட்டுநர் பயிற்ச்சி பள்ளியில் பயிற்ச்சியாளராக உள்ளதாகவும், அலுவலக வேலையாக வாகன பதிவுச்சான்று பெற RTO அலுவலகம் வந்ததாகவும், தான் மதிய உணவிற்காகவும், வாகன எரிபொருள் செலவிற்காகவும் பணம் ரூ.410/- கொண்டுவந்ததாகவும் தெரிவித்ததையடுத்து அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் அவர் வைத்திருந்த ராமகிருஷ்ணா வித்யாளயா பள்ளி வாகனம் TN-21-BD-1289 ன் FC Check list Form ஆவணம் கைப்பற்றப்பட்டது.
9.	திரு.இரவி, த/பெ.கோவிந்தராஜி, அரிநகர்-II, செவிலிமேடு, காஞ்சிபுரம்.	1,06,170/-	தான், தனது மகள் மற்றும் மனைவியுடன் காஞ்சிபுரம் டெயோட்டோ ஷோரூமில் புதிய கார் வாங்க இருப்பதாகவும், அதற்கு பேன்ஸி நம்பர் வாங்குவதற்காக காஞ்சிபுரம் பாராளுமன்ற உறுப்பினரின் பரிந்துரை கடிதம் பெற்றுகொண்டு, RTO அலுவலகம் வந்ததாகவும், மேற்படி ஷோரூமிற்கு பணம் கட்டுவதற்காக பணம் ரூ.1,06,170/- கொண்டுவந்ததாகவும், அலுவலகத்திற்கு பணம் கொண்டுவரக்கூடாது என்று தனக்கு தெரியாது என்றும் தெரிவித்தார், அவரது விளக்கம் ஏற்றுக்கொள்ளக்கூடிதாக இருந்தமையால், அப்பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

மேலும் வட்டார போக்குவரத்து அலுவலர் அலுவலக அறை, நேர்முக உதவியாளர் அலுவலக அறை, மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக அறை, Bonton அலுவலக அறை, பதிவறை,

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

முதல் மாடியில் இயங்கி வரும் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பயிற்சி அறை மற்றும் அலுவலகத்தை சுற்றியுள்ள இடங்களிலும் சோதனை செய்யப்பட்டு. பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. மேலும் அலுவலகத்தில் கொடிநாள் ரசீது கட்டணம் பற்றி PA to RTO திரு.லோகநாதன் அவர்களிடம் விசாரித்தபோது. கொடிநாள் ரசீது கட்டணம் பணமாக வசூலிப்பதில்லை எனவும். மனுதாரர்களால் ஆன்லைனில் செலுத்தப்படுவதாகவும் தெரிவித்தனர். மேலும் அலுவலகத்தில் எந்த விதமான கட்டணமும் பணமாக வசூலிக்கக்கூடாது. எல்லாம் ஆன்லைனில் கட்டணம் செலுத்தவேண்டும் என்றும் தெரிவித்தார். மேலும் அலுவலகத்தில் அரசால் வழங்கப்பட்ட கண்காணிப்பு கேமிரா மொத்தம் 11 உள்ளதாகவும். அதில் தற்போது 6 மட்டுமே வேலை செய்வதாகவும் மீதமுள்ள 5 கேமிராக்கள் பழுதடைந்துள்ளதாகவும் தெரிவித்தார். மேற்படி 6 கேமிராக்களும் கடந்த மார்ச்-1, 2026 முதல் Switch Off ஆகி உள்ளதாகவும். மேற்படி கேமிராக்கள் அனைத்தும் வட்டார போக்குவரத்து அலுவலரின் கட்டுப்பாட்டில் உள்ளதால் தங்களுக்கு எதுவும் தெரியாது என்று தெரிவித்தார்கள். மேலும் கடைசியாக எப்போது கேமிரா Switch Off செய்யப்பட்டது என்ற விவரத்தை செல்போனில் (பிப்ரவரி-2026. மார்ச்-2026. ஏப்ரல்-2026. மே-2026 மற்றும் ஜீன்-2026) போட்டோ எடுத்து கணினியில் பிரிண்ட் எடுத்து (5 தாள்கள்) PA to RTO திரு.லோகநாதன் அவர்களால் சான்றொப்பமிட்டு வழங்கியதை என்னால் விசாணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி பட்டியலில் குறிப்பிட்ட அலுவலக பணியாளர்களில் வ.எண். 1 முதல் 12 வரை பணியாளர்களிடமிருந்து. டிரைவிங் ஸ்கூல் பணியாளர்கள். இடைத்தரகர்கள். வாகன உரிமையாளர் 1) திரு.கமலேஷ். 2) திரு.ஜெயராஜ். 3) திரு.டில்லிபாபு. 4) திரு.பாலசந்திரன் ஆகியோர்களிடமிருந்து என்னால் வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் தனி நபர்களான 1) திரு.பஞ்சாட்சரம். 2) திரு.முரளி. 3) திரு.ராஜேஸ்வரன். 4) திரு.அஸ்ஸலாம். 5) திரு.இரவி ஆகியோர்களிடமிருந்து தன்னிலை விளக்கம் என் முன்னிலையில் அவர்களது கைப்பட எழுதி கொடுத்தார்கள். அதில் நான் கையொப்பமிட்டேன். மேலும் 1) திரு.சிவராஜ். MVI (Grade-1), 2) திரு.லோகநாதன். PA to RTO, 3) 2) திரு.கார்த்திக். MVI (Grade-II), O/o. the Joint Commissioner, Chennai (South) ஆகியோர்கள் என் முன்பாக தன்னிலை விளக்கம் எழுதி கொடுத்தார்கள் அதில் நான் கையொப்பம் செய்தேன். மேலும் சோதனையின்போது காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பராமரிக்கப்பட்டு வரும் 1) கையிருப்பு பதிவேடு நாள்-18.06.2026 (2 தாள்கள்). 2) வருகைப்பதிவேடு-ஜூன்-2026 (4 தாள்கள்). 3) அனுமதி

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

பதிவேடு (2 தள்கள்), 5) நடமாட்ட பதிவேடு (2 தாள்கள்) ஆகியவற்றினை நகலெடுத்து அதில் உண்மை நகல் என்று PA to RTO திரு.லோகநாதன் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்கு என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் அலுவலகத்திலிருந்த 1) நாராயணா பஸ் சர்வீஸ் நிறுவனத்தில் அனுமதி சீட்டு (2 தாள்கள்), 2) திரு.கமலேஷ் என்பவரிடமிருந்து அன்பு புகை பரிசோதனை நிலைய உரிமம் புதுப்பித்தல் மனு (3 தாள்கள்), 3) திரு.பஞ்சாட்சாட்சரம் என்பவரிடமிருந்து ராமகிருஷ்ணா வித்யாலயா மெட்ரிக் மேல்நிலை பள்ளியின் TN-21-BD-1289 வாகனத்தின் உரிமம் புதுப்பித்தல் மனு (4 தாள்கள்) ஆகியவற்றினை நகலெடுத்து உண்மை நகலென PA to RTO திரு.லோகநாதன் அவர்களிடம் சான்றொப்பம் பெற்று விசாரணைக்கு என்னால் கைப்பற்றப்பட்டது. மேலும் எங்களுக்கு கிடைத்த ரகசிய தகவலின்படி நானும், காவல் துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர் திருமதி.கீதா மற்றும் விஜிலன்ஸ் குழுவினருடன் சென்று வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் அருகில் அமைந்துள்ள 1) SSV Xerox கடைக்கு சென்று அங்கு பணியில் இருந்த திருமதி.வேல்விழி, திருமதி.ரீகா மற்றும் திருமதி.வேதவள்ளி ஆகியோர் முன்னிலையில் சோதனை செய்தபோது, மேற்படி கடையில் ஜெராக்ஸ் எடுத்த கட்டணம் ரூ.2,300/- இருந்தது அதை சரிபார்த்து அவர்களிடமே ஒப்படைக்கப்பட்டது, வேறு எந்தவிதமான ஆவணங்களும் கிடைக்கப்பெறவில்லை, அதேபோல 2) ஸ்ரீ காமாட்சி வாகன புகை பரிசோதனை நிலையம் மற்றும் 3) ஸ்ரீ காமாட்சி ஓட்டுநர் பயிற்சி பள்ளிக்கு சென்றபோது, அங்கு திரு.சந்தோஷ், த பெ.செல்வராஜ் என்பவர் பணியில் இருந்தார், அவரிடம் தகவல் தெரிவித்து, அவர் முன்னிலையில் சோதனை செய்யபட்டபோது, எந்தவிதமான ஆவணங்களும் கைப்பற்றப்படவில்லை. மேலும் இந்த சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த பொருட்கள் மற்றும் ஆவணங்களுக்கு எந்த ஒரு சேதமும் ஏற்படுத்தவில்லை, பெண் பணியாளர்களை காவல் ஆய்வாளர் திருமதி.கீதா, பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் திருமதி.ஜமுனா மூலமாக சோதனை செய்யப்பட்டது. சோதனையின்போது அலுவலகத்தில் இருந்த அலுவலர்கள் மற்றும் தனி நபர்களுக்கு எந்த விதத்திலும் துன்புறுத்தலோ, அச்சுறுத்தலோ செய்யாமல், அவர்களாகவே கொடுத்த வாக்குமூலத்தை என்னால் பதிவு செய்யப்பட்டது. இச்சோதனையில் உரிமை கோரப்படாத மற்றும் கணக்கில்வராத பணம் மொத்தம் ரூ.69,020/- கைப்பற்றப்பட்டது. மேற்படி சோதனை முடியும்வரை வட்டார போக்குவரத்து அலுவலர் திரு.நாகராஜன் அலுவலகத்திற்கு வரவில்லை. அலுவலகத்தை நல்ல முறையில் PA to RTO

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

திரு.லோகநாதன் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த சோதனை காஞ்சிபுரம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலக கணினி அறையில் என்னால் சொல்ல விஜிலன்ஸ் தலைமை காவலர் திரு.ஜெகதீசன் மூலமாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிரிண்ட் எடுக்கப்பட்டது. மேற்குறிப்பிட்ட அனைத்து நடவடிக்கைகளும். இன்று 18.06.2026-ந்தேதி மதியம் சுமார் 12.00 மணிக்கு தொடங்கப்பட்டு 21.45 மணிக்கு முடிக்கப்பட்டது.

ஒப்பம் 1) திரு.ஜெ.லோகநாதன், PA to RTO, RTO Office, Kanchipuram.	ஒப்பம் 2) திரு.து.சிவராஜ், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-1), O/o. the RTO, Kanchipuram.	ஒப்பம் 3) திரு.ச.கார்த்திக், மோட்டார் வாகன ஆய்வாளர் (நிலை-II). O/o. the Joint Transport Commissioner, Chennai (South).
ஒப்பம் 4) திரு.கல்யாணசுந்தரம், கண்காணிப்பாளர், RTO Office, Kanchipuram.	ஒப்பம் 5) திருமதி.தமிழ்செல்வி, கண்காணிப்பாளர், RTO Office, Kanchipuram.	ஒப்பம் 6) திரு.பெ.ஏழுமலை, உதவியாளர், RTO Office, Kanchipuram.
ஒப்பம் 7) திரு.சே.பிரித்விராஜன், உதவியாளர், RTO Office, Kanchipuram.	ஒப்பம் 8) திரு.ஆ.ஸ்டீபன், இளநிலை உதவியாளர், RTO Office, Kanchipuram.	ஒப்பம் 9) திரு.கு.சரவணகுமார், A-4 இளநிலை உதவியாளர், RTO Office, Kanchipuram.
ஒப்பம் 10) திரு.கி.பத்ரி நாராயாணன், அலுவலக உதவியாளர், RTO Office, Kanchipuram.	ஒப்பம் 11) திரு.நா.சக்திவேல், தட்டச்சர், RTO Office, Kanchipuram.	ஒப்பம் 12) திருமதி.மகாலட்சுமி, கணக்கர், RTO Office, Kanchipuram.
ஒப்பம் 13) திரு.ர.கமலேஷ், த/பெ.ரவி, எண்.49ஏ, மளிகை தெரு, காஞ்சிபுரம்.	ஒப்பம் 14) திரு.ச.பாலசந்தரன், த/பெ.சந்தானம், எண்.5/11, இரட்டை பிள்ளையார் கோயில் தெரு, காஞ்சிபுரம்.	ஒப்பம் 15) திரு.சு.டில்லிபாபு, த/பெ.சுப்பரமணி, பிளாட் எண்.138, எம்.ஜி.ஆர். நகர், சிறுகாவேரிபாக்கம், காஞ்சிபுரம்.
ஒப்பம் 16) திரு.ஜெயராஜ், த/பெ.கோவிந்தன், எண்.47/18, காவரை தெரு, வந்தவாசி, திருவண்ணாமலை.	ஒப்பம் 17) திரு.A.சிதம்பரம், SI of Police, V&AC, காஞ்சிபுரம்.	ஒப்பம் 18) திருமதி.R.கீதா, Inspector, V&AC, காஞ்சிபுரம்.

(FIR contents, continues to next page.....)

(Contents of the F.I.R. in Kanchipuram V & AC, Cr.No.02/AC/2026/KM, U/s 7, 7 (A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS continues . . .)

ஒப்பம் 19) திரு.V.தேவநாராயாணன். Inspector, V&AC, காஞ்சிபுரம்.	ஒப்பம் 20) திரு.K.V.கலைசெல்வம். DSP, V&AC, காஞ்சிபுரம்.	ஒப்பம் 21) திரு.R.மோகன்குமார். தனி வட்டாட்சியர். பேரிடர் மேலாண்மை. மாவட்ட ஆட்சியர் அலுவலகம். காஞ்சிபுரம். கூடுதல் பொறுப்பு மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர். காஞ்சிபுரம்.

நகல் ஒன்றை பெற்றுக்கொண்டேன் sd, xxxx (J.LOGANATHAN, 18/06/2026, PA to RTO-KPM).

Honoured Sir,

On endorsement of DSP, V&AC, Kanchipuram, I received a complaint and registered a case in Kanchipuram V&AC, Cr.No.02/AC/2026/KM, u/s.7, 7(A) & 12 of the Prevention of Corruption Act, 1988 (as amended in 2018) and 106 BNSS on 19.06.2026 at 15.30 hrs. and tookup the investigation.

The original FIR along with complaint enclosed with the Proceedings of the Spl. Tahsildar, Disaster Management, District Collecotate, Kanchipuram, i/c. District Deputy Inspection Cell Officer, Kanchipruam, Tr.R.Mohankumar, connected documents and seized amount of Rs.69,020/- (un-accounted money / un-claimed money) at Regional Transport Office, Kanchipuram District are submitted before the Hon'ble Principal District and Sessions Judge, Kanchipuram and other copies are submitted to superior officer concerned.

19/6/26

Inspector of Police
Vigilance and Anti-Corruption
Kanchipuram - 631501.